ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

05.02.2026

1. அறியாமை வழிதனில் அலைந்தொழிந்து
அளவிலா பொருளிழப்புதனை செய்து
வறுமையில் வாடும் கலி மக்களே
வருங்காலம் வளமாக வேண்டுமா

2. வேண்டுமாயின் உண்மை நெறி அரங்கன் நெறி
வழிமொழிந்து பிரணவக்குடில் அணுகி
தொண்டனாகி தொண்டில் இணைந்து
தொடரவே ஞானவழி உண்மை நிலை

3. உண்மை நிலை அடைந்து தெளிந்து
உலக மாயை இருள் கடந்து
நன்மை தரும் ஞானிகள் ஆசி அடைவீர் எனக்கூறி
நாட்டிடுவேன் அரங்கனும் குருவார அருளாசி

4. அருளாசிதனை விசுவாவசு கலை திங்கள்
அறிவிப்பேன் சதுர்குருவார ஆசியாக
இருளென்னும் அறியாமை விலகியே
இடர்களை வெல்லும் ஞானஒளி கிடைக்க

5. கிடைக்கவே அரங்கன் என் பீடம்
குறைவிலா வந்தணுகி சரணடைய
தடைகளெல்லாம் வாழ்வில் விலகி
தானென்ற ஆணவ மாயை விலகியே

6. விலகியே எல்லாம் வினைப்பயன்
வினை வெல்ல என்ன வழியென
ஞாலமதில் சிந்திக்கும் ஆற்றலும்
ஞானிகளை பூஜிக்கும் வல்லமை கிட்டி

7. கிட்டியே பிரணவக்குடில் தொடர்பால்
கேட்காமலே சில வரங்கள் கிட்டி
தட்டிவரும் காரியங்கள் யாவும்
தானாக அவரவர்க்கு வெற்றி கண்டு

8. கண்டுமே வாழ்வில் வளங்களும்
கலிகால கஷ்டங்களை வென்று
உண்டாகும் அருள் பொருள் வளம்
உண்மை நிலை காட்டும் அரங்கன்

9. அரங்கனென் அன்னதான நெறியை
அணுகிப் பொருளுதவி செய்து
வரங்கள் தரும் அருளமுது உண்டு
வணங்கி அரங்கனென் பேரிலே

10. பேரிலே அவரவர் எல்லையில்
புகலுவேன் அன்னதானம் துவக்கி
தருமபலம் பெருக்கிக் கொள்ள
தவசிகள் மற்றும் மகா சக்திகள் ஆசி

11. ஆசி அவரவர்க்கும் கிட்டியே
அகிலம் வந்த நோக்கமடைந்து
ஆசி அனுகூலத்தால் பிறவிதனை கடப்பர்
ஆறுமுக அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி